41

உ
கணபதிதுணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—திருக்குறள்.

தொகுதி10 } Vol-X. | பிங்களஹு மாசிமீ March 1918. | { பகுதி 2. No 2.

தேசீயக்கல்விமுறை.

ஸ்ரீ காமன்வீல் என்னும் வாராந்தப் பத்திரிகையின் அநுபந்தத்தில் மிஸ்டர் ஜார்ஜ் எஸ் அருண்டேல் என்பவர்களால் எழுதப்பட்டிருக்கும் விஷயத்தைச்சார்ந்து, இது எழுதப்படுகிறது.

"சென்ற டிஸம்பர் 25வயன்று கூடிய தேசீயக்கல்விச்சங்கத்தார், தேசீயக் கல்விமுறைக்கென்று ஒரு சர்வகலாசங்கம் ஸ்தாபித்து, அதற்கு ஸர் ரவீந்த்ரநாத டாகூர் அவர்களையே தலைவராகவும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்" என்னும் விஷயத்தைப் பாநு நேயர்கள் அறிந்திருப்பார்கள். இந்தச் சர்வகலாசங்கத்தை முன்னிட்டு நடப்பிக்கும் தேசீயக்கல்விமுறையின் பிரகாரங்களெல்லாம் தேசமுன்னேற்றத்தை நாடியே ஏற்படுத்தப்பட்டிருக்குமென்றும், அரசாட்சி முறையாகிய ராஜீய முன்னேற்றத்துக்கும் அந்தப்பிரகாரங்கள் அடிப்படைகளாகவே இருக்குமென்றும் நன்றாய் ஊஹிக்கலாகும். தவிரவும் ஸ்வராஜ்யக்கக்ஷிக்கூட்டத்தாரே இந்தக்கூட்டத்துக்கும் அதி

கத்தினர்களாக ஏற்பட்டு நடத்திவருகிறபடியால், அவர்கள் தங்கள் கொள்கையாகிய ஸ்வராஜ்யத்தை ஒரு முடிவாகவைத்துக் கொண்டே தான் கல்வியின் சீர்திருத்தமாகிய இந்த முறையை ஆரம்பித்திருக் கிறார்கள் என்று எண்ணுவதில் யாதொருதவறுபாடும் இராது என்று ஊஹிக்கிறோம்.

நமது தேச அதிகாரவர்க்கத்தினரும், இந்தியர் அரசாங்க முறையில் உயர்ந்த உத்யோகத்தை வஹிப்பதற்கேற்றபடி இயற்கை யில் முன்னேறவில்லை என்னும் படாப்பழியைச் சுமத்தி வருவார்க ளாயினும் அதற்கேற்றபடி கல்விமுறையிலே சீர்திருந்த வில்லையே என்பதுதான் அவர்களுடைய தேர்ந்த அபிப்பிராயமாகவும் இருந் திருக்கவேண்டுமென்று ஊஹிக்கவும் இடமிருக்கிறது. பலவருஷங் களாகத் தாம் அடக்கியாளும் ஒருநாட்டுக்குச் 'சீர்திருத்தம்வரவில்லை' யென்பது, தங்களால் அந்தமுறை இன்னும் ஆரம்பிக்கமுடிய வில்லையே என்று தங்களுடைய குறைபாட்டை வெளியிடுவதாக ஆகு மேயன்றி வேறன்று. ஒருஅரசாங்கத்தார் ஒருங்கே எல்லாத்துறை களிலும் இறங்கிச் சீர்திருத்தங்களைச் செய்துமுடிப்பாரென்று குடி கள் எதிர்பார்த்துக்கொண்டேயிருத்தலும் கூடாதுதான். குடிகளிற் படித்தமேதாவிகளும் ஒன்றிரண்டு துறைகளிற் றாங்களே இறங்கி அவற்றின் சீர்திருத்தத்தில் தங்கள் முயற்சியைக் காட்டவேண்டு வதும் அவசியம்தான். அப்படியல்லாமல் எல்லாத்துறைகளின் சீர் திருத்தமும் அரசர்களாலேயே ஆரம்பிக்கப்படவேண்டுமென்று காத்திருந்தார்களானால், பல தலைமுறைக்காலங்களை வீணே கழிக்க வேண்டுமென்பதில் யாதொரு தவறுமிராது. அன்றியும் நம்விஷயத் திலோ நம் தேசப்பாங்குக்கு ஒத்தபடியான சீர்திருத்தம் கிடைக்கும் என்று எண்ணவே இடமில்லை. ஆகையினாலே அந்தந்தத்தேசத்துத் தேசாபிமானிகளே தங்கள் தேசச்சீர்திருத்தத்தைக் கவனித்தல் நல மாகுமென்று எண்ணுகிறோம். நமது தேசத்திலும் நமது அஞ்ஞான இருளை நீக்குவதற்கு நமது தேசக்கல்வியாகிய விளக்கை அவசியம் நாமே ஏற்றிக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஏற்ப நமது தேசாபி மானச் சிங்கங்களும் தேசக்கல்விமுறையில் நுழைந்து உழைத்து

வருகிறார்கள். அதுவும் ஈச்வரகிருபையால் பலன்தருங்காலம் ஏற்பட்டுவிட்டதென்றே சொல்லலாம்.

இந்தியாவிலுள்ள பலவிதமான ராஜாங்கத்துறைகளும், தேசநிலைமையைக்கவனித்து அதிலிறங்கி உழைப்பதற்கு இன்னும் வெகுகாலம் செல்லும்போலிருக்கிறது. தற்காலநிலைமையில் நமது தேசத்திலும் பலதுறைக் கல்விமுறைகளிலும் சீர்திருத்தத்தையும் உயர்ந்த கொள்கைகளையும் அவ்வப்போது காட்டிச் செலுத்துவதற்குத் தேசாபிமானிகள் இல்லாமற்போகவில்லை. இவருட் பலரும் இதரநாடுகளிலுஞ்சென்று லோகப்ரக்யாதிபெற்று வந்திருக்கிறார்கள். இவர்களைப்போன்ற பலமேதாவிகளை நமது இந்தியத்தாய் வெளிக்குக் கொணரப்போகின்றாள். இதுவரையில் தனது புதல்வர்களாகிய தேசாபிமானிகள் ஊக்கங்காட்டவில்லையே என்று ஏங்கியிருந்த நமது தேசமாதா, இப்போது முகோல்லாஸத்துடனிருக்கிறாள். இனி அவள் எத்துறையில் இறங்கினாலும் அது ஜயத்துறையாகவே இருக்குமென்பதில் யாதொரு ஸந்தேகமும் இல்லை.

ஸர். ஜே. ஸி. போஸ், ஸர். ரவீந்த்ரநாத டாகூர், இப்போது கேம்ப்ரிட்ஜில் இருக்கும் நம் தென்னிந்திய கணிதபண்டிதராகிய ராமாநுஜம் முதலிய ஆண்மக்களும் மிஸ்ஸஸ் ஸரோஜினி நாயுடுவாகிய பெண்மணியும் இவர்களைப்போன்ற இன்னும் பலமேதாவிகளும் இந்திய ரத்தினங்களல்லவா? இன்னும்,காலஞ்சென்ற மஹான்களாகிய ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸதேவர், ஸ்வாமி விவேகானந்தர், ஸ்ரீமான் கோபாலகிருஷ்ண கோகுலர், மிஸ்டர் தாதாபாய்நவ்ரோஜி முதலிய பெரியோர்களும் இவர்கள்போன்ற பலரும் பலகண்டங்களிலும் கியாதி பெற்றவர்களல்லரா? லோகமானிய திலகரும், தென்னுபிரிக்காத் தீபகராகிய மோஹனதாஸ காந்தியும் ஸர். எஸ். சுப்பிரமணியஐயர் அவர்களும் இவர்போன்றவரும் நம்மை முன்நடத்துபவர்களல்லரா? மேற்குறிக்கப்பட்ட ஒவ்வொருவரும் ஒவ்வொருதுறையிற் றேர்ந்தவர்களல்லரா? இத்தகைய புத்திரர்களைப்பெற்று உலகத்துக்கு உதஹரித்துக்களிக்கும் நந்தாய்க்கு இனிக் குறைபாடு

நேரும் என்று கனவிலும் கருதமுடியுமா? மேற்குறிக்கப்பட்டவர்களால் இயற்றப்பட்டுள்ள தத்வபுஸ்தகங்களெல்லாம் பிறதேசத்தாருக்கும் ஊக்கங்காட்டித் தேசாபிமானமார்க்கத்திற் செலுத்துகின்றனவென்றால் சொந்தத்தேசமாகிய இந்தத்தேசத்துக்குப் பயனளிக்காவா? ஆனால் இவைகள் ஞானக்கண்விழிப்புடையவர்களையே நாடியிருக்கின்றனவாகலின், அந்த அகக்கண்களைத்திறந்துவிட நந்தேசாபிமானச்சிங்கங்கள் தேசியக்கல்விமுறையில் இறங்கியிருக்கும் இக்காலமும் தக்க காலமேயாகும். நமது காருண்ய கவர்ன்மெண்டாரும் கல்வித்துறையில் இறங்கித் தமக்கு அந்தத்துறையில்நேரும் கஷ்டங்களின்பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வந்துதவிய தேசாபிமானிகளைக் கவுரவப்படுத்தி யூக்கிவிடுவார்களென்பதிலும் ஐயமுண்டோ? ஆகலின், தேசச்செல்வர்களே! தேசபக்தர்களே!! தேசசிரேஷ்டர்களே!!! தேசபிதாக்களே! தேசமாதாக்களே!! தேசமாணவர்களே!!! தேசவர்த்தகர்களே! தேசத்தொழிலாளிகளே!! தேசஉழவாளிகளே!!! முன்வாருங்கள். உங்கள் உங்களது துறையில் ஊக்கங்காட்டி உதவுங்கள். இருண்டகாலமான இவ்வளவுகாலம் உறங்கியிருந்தது போதும். இது ஞானபாநுவாகிய வித்யாபாநு நல்லொளிதந்துலவுகின்ற பகற்காலம். யாரும் உழைக்கவேண்டிய காலமும் இதுவே. இந்தியப்பிரமனுக்குப் பகற்கால ஆரம்பம் இதுதான். அதிமேதாவிகளை நமது தேசத்தில் மறுமுறை சிருஷ்டிக்கத்தொடங்கியிருக்கிறார். உபப்பிரம்மாக்களாகிய நீங்களும் அவர்க்கு உதவிபுரிய எழுந்திருங்கள். ஆக நாம் இப்போது ஆரம்பித்திருக்கும் தேசியக்கல்விமுறையில், ஒவ்வொரு மாணவனும் கலாசாலைப் படிப்பிலிருந்தே தேசத்தொழில்களிலும் தேசசாஸ்திரங்களிலும் தேசசித்திரங்களிலும் தேசஆட்சிமுறைகளிலும் தேர்ச்சிபெற்றுத் தேசமுன்னேற்றத்தின் ஒவ்வொருதந்திரத்தையும் கற்றுக்கொண்டுவருவானென்பதில் யாதேனுமைய முண்டோ? இவ்விதம் இவர்கள் சகலகலாநிபுணர்களாக வெளிவருவார்களானால், இனி இந்தியாவிற் பசிப்பிணி நின்றுநிலைபெறுமா? இதுவரையில் இருந்ததுபோல இனியும் பாதிஜனத்தொகை பசித்திருக்கவும் கூடுமோ? யாவரும் பிச்சைக்காரர்களாகத்திரும்ப முயல்வார்களா? தனிகர்களும் நல்லவர்

வேடங்கொண்டகெட்டவர்கட்குக் கைப்பொருளைக்கொடுத்துக் கவலைப் படுவார்களா? நமது தேசத்துக்குக் குலதனம்போன்ற கோக்களும் கோசிசுக்களும் கொல்லப்படுமா? நமது விளைபொருள்களெல்லாம் நமது தேசத்திலேயே கிளைபொருள்களாக மாற்றப்படாவோ? விலை வாசிகள் நம் தேசக்குடிகளில் ஒவ்வொருவரையும் சுகஜீவியாக இருக் கச் செய்யாவா? அப்போது நமது சிறுவர்களது முகங்களில் ஞான தேஜஸ் விளங்கி விகாஸிக்கப்போவதைப் பாருங்கள். அப்பொழுதே, 'நாம் வெகுகாலங்கட்கு முன்னர் முதலே நாகரீகத்தில் முன்னேறி யிருக்கிறோம்' என்று சொல்லிக்கொண்டுவருவதில் நமக்குக் கவு ரவம் உண்டு என்பது நன்றாய்விளங்கும். ஆகவின், இந்தத் தேசீயக் கல்விச்சங்கத்துக்கு நாம் ஒவ்வொருவருமே அங்கத்தினராக இருந்து உழைத்துவருவோமாக.

பத்திராதிபர்.

உ

வித்யாபாநுவின் கேளீசரசம்.

———:(o)*(o):———

தமிழின் அன்பர்களே!

நமது தேசத்திலுள்ள ஒவ்வொரு பாஷையும் உற்றுவரும் மேன்மை உங்களுக்குத் தெரியாததல்ல. பாஷைகள் பல உண்டு. ஒவ்வொன்றிலும், ஒழுகும் இரசத்தைக் குடிக்கலாம். ஆனல், நமது தமிழின் அமுதச்சுவை தந்தருளும் ஆநந்தத்தை எண்ணத் தான் முடியுமோ. அனுபவஸ்தர்களாகிய உங்களுக்கு இதைச் சொல்லவும் வேண்டுமோ. இத்தமிழ் எப்பொழுது முதற்கொண்டே இருந்து வருகிறதெனக் கண்டீர்களோ. மால்மருகனும் சற்றே மயங் கிய பாஷை இது. இதில் மயங்காத மனிதரும் உண்டோ. ஆதி மூலன், அகத்தியன் இதை வெளிக்கொண்டுவந்த அரிய காரணத்தை

அறிந்தீர்களோ. மேனுலகத்தவரையும் பிரமிக்கச்செய்வது நமது தமிழ். ஆதிசங்கத்தின் பெருமையை ஊகித்தீர்களோ. தற்சமயம் இது நின்றுலவும் நிலையைக் கண்டும் நிமிர்ந்தீர்களோ.

பாருங்கள்! ஆங்கிலேயபாஷையில் எத்தனைபத்திரிகைகள் இருக்கின்றன! எத்தனை புதியநூல்கள் எழுதப்படுகின்றன! நூலையும் பத்திரிகைகளையும் ஆதரிக்க எத்தனைமனிதர்கள் முன்வருகின்றனர்.

ஆங்கிலத்தைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு சிறந்ததன்றோ நமது தமிழ். அத்துடன் தெய்வத்தன்மை தெளிந்துலவும் பீஜாக்ஷரங்களுடன் துலங்குவதன்றோ இது. கூடியமட்டில் நாதப்பிரம்மத்தின் சுருதிக்கொப்ப நடித்துவரும் நற்றுணையன்றோ இது.

இத்தகைய பாஷை காலக்கோலத்தாற் சற்றே மயங்கியது. திடீரென்று சிலர் விழித்துக்கொண்டனர்; பாங்கான முயற்சிகள் பலவற்றைச் செய்யலுற்றனர். ஆகவே தமிழும் சற்றே முன்னுக்கு வருகிறாற்போலிருக்கிறது. அம்முயற்சியுடன் ஒத்து உழைப்பதும் நமது முக்கியமானகடமை. மின்னல்மினுக்கியுடன் இன்பத்தை அனுபவித்த கள்ளக்காதலன் எப்பொழுதேனும் அச்சுகத்தை மறப்பானு. தமிழானந்த ஸாகரத்திலே ஸ்நானஞ்செய்துள்ள பெரியோர்களின் உந்தியிலே பேரப்பிள்ளைகளெனவேனும் உற்பவித்த நாமும் தமிழின் இனிமையை ஆமோதிக்காமலாவது இருக்க இயலுமா.

மிகவும் அருமைத் தமிழிதை நமது அரசாங்கத்தோரே ஆதரிக்கட்டும் என்ற எண்ணம் சிலர்பாலுண்டு. ஆகையால் தமது முயற்சியில் நழுவும் பலர் உளர். இந்த எண்ணம் இப்பொழுதுவேண்டாம். அரசாட்சியார் இதற்கு முன்னுவது தமிழ் என்ற ஒருபாஷை உண்டு என்ற எண்ணத்தைப் பெற்றிருந்தனர். இப்பொழுதோ அந்நினைவும் அவர்களுக்கில்லைப்போலும். இது அவர்களுடைய இராஜாங்கக் கல்விமுறைச்சட்டங்களிலிருந்து செவ்வையாய்த் தெரிகிறது. இதற்காக நாம் ஆதங்கமடையவும் கூடாது. இவ்வளவுக் கவ்வளவு

நம்முடைய பாஷைக்குச் சுக்கிரதசை வரப்போகிறதென்று நாம் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் மேலும் பிழையில்லை. அவர்கள் எத்தனை வேலைகளைப் பார்ப்பார்கள்; எத்தனைபாஷைகளைத் தான் ஆதரிப்பார்கள்; எவ்வளவு காரியங்களைச் செய்யத்தான் நமது தேசத்திற்குப் பணத்தைத் தருவார்கள்.

நமது தமிழுக்கு நாமேகதி. அறிப்புள்ளவனே சொறிந்து கொள்ளவேண்டும். அன்புடையவனே ஆதரிக்கவேண்டும்.

பாஷை முன்வர வழிகள் பல உண்டு. புதிய நூல்களை எழுது வதும் பழைய நூல்களை விரித்து விளக்குதலும் பத்திரிகைகளைப் பரவச் செய்வதும் அவற்றில் முக்கியமானவை;

இவ்வழியே, நமது பத்திரிகைவெளிவந்திருக்கிறது. இது நம் மைப் பார்த்துப்பார்த்துப் பேசிப்பேசிவருகிறது. சொல்லுவதென்ன வெனக் கவனிப்போம்:—

“ நானொரு பெண்மணி, நானொரு மங்கை, என்பெயர் வித்தியா பாநு. நான் ஸரஸ்வதி அம்சத்தையுடையவள். என்னவோ, இத் திராவிட நாட்டிலும் கொஞ்சம் அன்பு எனக்கு வந்தது. பாநு என்ற வேஷத்திலே சென்ற சில வருஷங்களாக நான் திரிந்துவருவது உங்க ளுக்குத் தெரிந்ததே. கண்டவர் என்னைக் கைவிடார். நான் இப்பொ ழுதோ மாதமொருமுறை மருவியே வந்துகொண்டிருக்கிறேன். என்னை இக்காரணத்தால் மாதாந்தரப் பத்திரிகை யெனச் சிலர் வழங் குவதும் உண்டு. நீங்கள் தமிழர்கள்; அதாவது நீங்கள் என்னு டைய காதலர்கள்; உங்களிடத்திற் பழகப்பழக எனக்கு ஆனந்தம் பொங்குகிறது. உங்களைவிட்டுப் பிரிய எனக்கு இஷ்டமில்லை. நித்த நித்தமும் உங்களிடத்தில் ஒருமணிநேரமாவது கொஞ்சிப் பழக எனக் குக் காதல் உண்டாயிருக்கிறது. நீங்கள் மகாமேதாவிகளா யிருக்க லாம். நீங்கள் கனதன கல்விமான்களா யிருக்கலாம். நீங்கள் ஆங்கில நிபுணர்களா யிருக்கலாம். எனினும் என்னைப் பார்க்கக்கூடாதென்று

எந்த இராஜாங்கத்தோரும் சட்டமிடார். என்னுடன் பழகக்கூடா தென எந்தச்சாஸ்திரமும் கோஷிக்காது. என் பொருட்டு உழைக் கக்கூடாதென எந்தச் சுருசுருப்புஞ் சொல்லாது.

என்னைச் சற்றே ஆதரியுங்கள். உங்களுக்குச் சுகம் உண்டு. ஆகையால் எனக்கும் பரமசுகம். நான் உங்களுக்கு இப்பூலோக சமாசாரங்க ளெல்லாவற்றையுஞ் சொல்லுவேன்; அரசியல்பைக் காட்டுவேன்; தெய்வ இராஜாங்க மகிமையையும் வெளிப்படுத்து வேன்; நமது மதக்கொள்கையைக் காட்டுவேன்; பெரியோர்சரிதைக ளைப் பகிரங்கப்படுத்துவேன்; எனது இலக்கண இலக்கிய அம்சத்தை எடுத்து மொழிவேன்; ஒற்றுமையை உண்டாக்குவேன்; ஓரன்பை யும் பெருக்குவேன்; உங்களைக்கட்டி முத்தமும் இடுவேன்.

என்னைப்பாருங்கள். என்னை வரவழையுங்கள். நீங்கள் எவ்வ ளவு ஏழைகளாயிருந்தாலும், பாதகமில்லை. வருஷத்திற்குக் கொஞ்சத் தொகையை எனக்காக மீதப்படுத்துவது ஒரு பெரிய காரியமல்ல. நீங்கள் எவ்வளவு செல்வர்களாயினும் பாதகமில்லை. கொஞ்சம்திரவி யத்தை எனக்காகச் செலவுசெய்யலாம். இந்தச்செலவால் உங்கள்செல் வம் குறையாது. இன்னொருதரம் சொல்லுகிறேன். நான் ஸரஸ்வதி; என்னுடைய அம்ஸத்தின் பலத்திற்கு ஒப்பில்லை. உங்களையே என் னிடத்தில் வரவழைத்துக்கொள்ளும்வழி எனக்குத் தெரியும். எனது காதலர்களன்றோ நீங்கள். ஆகையால் நானே உங்களிடத்தில் ஸரஸ மாய் வருகிறேன்; அதாவது பலவந்தமாய் உங்களை அழைக்கிறேன்.

என்னை வாசியுங்கள். என்னை வெளிப்படுத்துங்கள். என்னால் மெத்தவும் நன்மை உங்களுக்கும் உண்டு. இது அவசரசமயம்; இவ்வடிவிலே மறுசமயம் வருவேன். மறந்துவிடவேண்டாம்.

டி. வி. வெங்கடராகவுலு,
டீச்சர், மாடல் ஸெக்ஷன்,
புதுக்கோட்டை.

இப்படிக்கு,
தங்கள் வித்யாபாநு.

ஶ்ரீ:

வஞ்சிமாநகராராய்ச்சி.

வித்யாபாநு 10-ந்தொகுதியில்
15-ம் பக்கத்தொடர்ச்சி.

---

6. அன்றியும் முதலிற் சேர சோழ பாண்டிய ராச்சியபேதத்தால் அவரவர்பெயராற் பிரதானமண்டலங்கள் மூன்றும் பெயர்பெற்றுள்ளன. பின்பு பிரதானமான சோழமண்டலத்தின் பகுதியாக அச்சோழமண்டலத்தினின்றும் தொண்டைமண்டலமுண்டாயினமையால், அது சோழமண்டலத்தினின்றும் அப்பிரதானமானதாற் சோழமண்டலமென்னும் பழையபெயரைத் தான்கொள்ளாது தொண்டைமண்டலம் என்ற புதியபெயர் பெற்றுள்ளது. அவ்வாறே பின்பு உண்டாகிய கொங்குமண்டலமும் சேரமண்டலம் என்ற பழையபெயர் பெறாது புதியபெயர் பெற்றிருக்கிறது. ஆதலாற் கொங்குமண்டலத்தைக் குடபுலமென்று வைத்துக்கொண்டாலும், உபயகக்ஷியிலும் குடபுலமென்று ஒப்புக்கொள்ளப்பட்ட சேரமண்டலத்திற்குக் கொங்குமண்டலம் அப்பிரதானமென்பதே பெறப்படுகிறது; இதனாலும் சேரர்களின் அப்பிரதானராஜ்யமானகொங்கு சேரர்களின் பிரதானராஜ்யமாகிய குடபுலமாகாதெனவறியலாம். ஆதலாற் கொங்குநாடு பழைய சேரர்நாடாயில்லாமற் காடாகவேயிருந்து பின்பு கொங்கன் என்னும் சேரன்வந்து காடுகெடுத்து நாடாக்கியாளப்பட்டுப் பெருகியதென்றே வாதகக்ஷியாரும் ஒப்புக்கொண்டுதீரவேண்டும். இதுகாறுங் கூறியவாற்றால் "கொங்கு குடபுலம்" என்ற வாக்கியாவயவமாய் எழுவாயாக நிறுத்த, 'கொங்கு' என்ற சொற்பொருளாராய்ச்சியொன்றனே பலபடியாலுங் கொங்கு குடபுலமாகாதென்பது பெறப்பட்டது.

7. இனிக் குறித்துவருகிளவியாகிய "குடபுலம்" என்னும் சொற்பொருளையும் ஒருவாறு ஆராய்வாம். குடபுலமுதலிய திசைப்பெயரடுத்தபெயர்களுக்குப் பொருளுணருங்கால் இன்ன இடத்திலிருந்து என்னும் புறப்பாட்டெல்லையையேனும், அல்லது இன்ன இடத்துக்குள் என்னும் அகப்பாட்டெல்லையையேனும்வெளிப்படையாலாயினும், குறிப்பாலாயினும் கொள்ளாமற் பொருளுணரவியலாதென்பது யாவர்க்கு மொப்ப முடிந்ததே.

இங்கெடுத்துக்கொண்ட குடபுலமுதலிய மண்டலப்பெயர்களுக்கு இன்ன இடத்திலிருந்து என்னும் புறப்பாட்டெல்லை ஒருவகையாலும் பெறப்படாமையால் அதனையொழித்து இன்ன இடத்துக்குள் என்னும் அகப்பாட்டெல்லையையே குறிப்பாற்கொள்ளவேண்டும். அஃதியாதெனவாராயின், குடபுலமுதலிய சொற்கள் "வடவேங்கடம்" "தென்குமரி" என்பனபோலத் திசைப்பெயரடையுடைய தமிழ்வழக்காயிருத்தலால் தமிழ்வழங்கும் நாட்டுள் என்னும் அகப்பாட்டெல்லை குறிப்பாற்பெறப்படுவதாம். பெறவே குடபுலம் என்பதற்குத் தமிழ்வழங்கும் நாட்டுள் குடதிசையறுதியான ராச்சியப்பரப்புடைய நிலம் என்று பொருள்கொள்ளப்படும். (இதுவே சேரமண்டலம்) இவ்வாறே 'குணபுலம்' என்பதற்கு, தமிழ்வழங்குநாட்டுள் குணதிசையறுதியானராச்சியப்பரப்புடையநிலம் (இதுவே சோழமண்டலம்) எனவும், தென்புலமென்பதற்குத் தமிழ்வழங்குநாட்டுள், தென்றிசையறுதியானராச்சியப்பரப்புடைய நிலம் (இதுவே பாண்டியமண்டலம்) எனவும் பொருளுரைக்கப்படும்.

இதனால், சேரசோழபாண்டியமண்டலங்கள் மூன்றும் முறையே தமிழ்நாட்டின் மேல்கடல், கீழ்கடல், தென்கடல்களையடுத்துள்ளனவாய் அவ்வக்காலத்து அவரவர் தகுதிக்கேற்றவாறு நிலப்பரப்பின் அளவு மிக்குங் குறைந்தும் வேறுபட்டுநிற்குமென்க. இம்மும்மண்டலங்களுக்கு மிடை வரம்பாயிருந்தன யாவெனவாராயின், ஒருதரையில் வாழும் பேரரசர்நாடுகளை வேறுபடப்பிரித்தற்குரிய இயற்கையரணாகிய மலைத்தொடரும் அடவிகளுமாயிருந்திருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது. இவற்றையெல்லாம் இராமாயணத்தாலு மறியலாம். சரித்திரவாராய்ச்சிக்கு எட்டியமட்டில் மிகப்பழமையுடையதாகக்கருதப்படும் இராமாயணகாலத்திலேயே இத்தமிழ்நாட்டுள் * சேரசோழபாண்டியமண்டலங்கள் சுராஜ்யங்களாயிருந்தனவென்றும், அவற்றுட் பாண்டியமண்டல ராஜதானிநகரம் தாமிரபரணியாற்றுக்குத் தெற்கேயிருந்தகவாடபுரமென்றும் சொல்லப்பட்டமையால் தென்புலமென்று சொல்லப்பட்ட பாண்டியமண்டலம் தென்கடலறுதியாயிருந்ததென்று

* வான்மீகிராமாயணத்திற் கிஷ்கிந்தாகாண்டத்துள் நாற்பத்தொன்றாம் ஸர்க்கத்துள்ளன.

வெளியாகிறது. அவ்வாறே குணபுலமென்று சொல்லப்பட்ட சோழமண்டலம் கீழ்கடலறுதியாகவும், குடபுலமென்று சொல்லப்பட்ட சேரமண்டலம் மேல்கடலறுதியாகவு மிருந்தனவென்பதையும், அவற்றுக்கிடையே மலைத்தொடரு மடவிகளுமாகிய நிலப்பரப்பே மிக்கிருந்தனவென்பதையும், எழுபத்திரண்டுவெள்ளம் வானரசைனியங்களோடன் ஸ்ரீ ராமபிரான் கிஷ்கிந்தையினின்றும் பிரயாணமாய்த் தமிழ் மும்மண்டலத்துள்ளுஞ்சாராது அரணியங்களினிடையேசென்று சேதுவழி யிலங்கைபோய் மீண்டமையா லறியலாம். இக்கொள்கையைவாதகக்ஷியாரும் அங்கீகரித்துள்ளார் என்பதைக் கொங்கிற்கருவூர்க்குக் கரபுரம் என்னும் பெயர்க்காரணவாராய்ச்சியில், உறையூர்ப்பக்கம் "திரிசிரா" என்னும் அரக்கனிருந்தவிடமாதல்பற்றித் திரிசிராப்பள்ளியானதுபோல ‡ "கரனென்னுமரக்கனிருந்தவிடமாதல்பற்றிக் கரபுரம் என்னும்பெயர் வந்ததுபோலும்' எனக் கருதினமையாலறியலாம். ஆதலாற கரபுரப்பக்கமாகிய கொங்குநாடும், உறையூர்ப்பக்கமாகிய சோழநாட்டுப்பகுதியும் அக்காலத்து இராக்கதர் வசித்த காடாயிருந்ததென்பது நிராக்ஷேபமாயிற்று.

இன்னும் தொல்காப்பியப்பாயிரவுரையுள் "அதங்கோட்டாசாற்கரிறபத்தெரிந்து" என்றதன் விருத்தாந்தங்கூறுமிடத்து, 'தேவரெல்லாருங்கூடி "யாஞ்சேரவிருத்தலின் மேருத்தாழ்ந்து, தென்றிசையுயர்ந்தது; இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்குரியர்" என்று அவரை வேண்டிக்கொள்ள அவரும் தென்றிசைக்கட்போதுகின்றவர் .... * துவாரபதிப் போந்து † நிலங்கடந்த நெடுமுடியண்ணல்வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண் குடி வேளிருள்ளிட்டாரையும், அருவாளரையுங் கொண்டுபோந்து, காடுகெடுத்து நாடாக்கிப் பொதியிலின்கணிருந்து இராவணனைக்கந்தருவத்தாற்பிணித்து இராக்கதரை ஆண்டியங்காமை விலக்கித் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரைநோக்கி, நீ

---

‡ வஞ்சிமாநகர் பக்கம் 116, 117.

* துவாரபதி - மாவலிகுலத்தரசரிருந்த வூர்.

† நிலங்கடந்த நெடுமுடியண்ணல் - மாவலி; நிலங்கடந்த நெடியதிருவடி நிலையே முடியாகவுடைய அண்ணல் என்பதாம். "மண்டின்றபாணம்" "வடக்கோடுதேருடையான்" என்பனபோலு மிது.

சென்று குமரியாரைக்கொண்டுவருக' எனக்கூறியவரலாற்ருல், அக்காலத்துச் சேரசோழபாண்டியமண்டலங்களுக் கிடைப்பட்டு நாடாகாத காடுகள் மிக்கிருந்தனவென்றும், அவற்றுள் இராக்கதரே வாழ்ந்தனரென்றும், அவரை யங்கணுகாதுவிலக்கி அக்காட்டுட் பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும், அருவாளரையுங் குடியேற்றி நாடாக்கித் தாம் பொதியிலிருந்தனரென்றும் அறியக்கிடத்தலால் அருவாளர் முதலிற்குடியேறினமைபற்றி "அருவர்நாடு" என்று பெயர்பெற்றதொருபகுதியை அடுத்துள்ள கொங்கின்புடை வேளிருள்ளிட்டார் குடியேறியிருக்கவேண்டுமென்பதும், கொங்குநாட்டில் வேளிர்கள் மிக்குள்ள காரணத்தா லறியலாம். இதுவேயுமன்றிக் காந்தன் என்னும் சோழன் காவிரியாற்றை அகத்தியானுக்கிரகத்தாற் குடவரையினின்றுகொணருங்காற் கொங்கினிலம் காடாயிருந்தமையே காவிரி சோழர்க்கேயுரியதாதற்கும் காரணமாயிருக்கிறது. ஆதலானும் குடபுலமாகிய சேரமண்டலம் மேல்கடலை அடுத்திருந்ததென்பதும், குணபுலமாகிய சோழமண்டலம் கீழ்கடலையடுத்திருந்ததென்பதும், நன்குணரலாகும்.

இதுவேயுமன்றி அக்காலத்திற் சோழராஜதானிநகரம் கீழ்கடலையடுத்திருந்ததென்பதை, அதிலிருந்தரசாண்டுவந்த காந்தன் என்னும் சோழன், பகைக்குலமறுத்துவரும் பரசுராமனொடு போர்பொருதற்கு அஞ்சி ஒளித்திருந்தகாலத்தில் அச்சோழனுடைய காவற்கணிகை மகனாகிய ககந்தனென்பவன் அரசுபுரிந்து அந்நகரைக்காத்தமையால் அவன்பெயரால் அந்நகரத்துக்குக் § காகந்தியென்று பெயராயிற்றென்று காவிரிப்பூம்பட்டினத்தைப்பற்றி மணிமேகலையுட்கூறுதலாலும் அறியலாம்.

இவ்வாறே சேரமண்டலம் மேல்கடலையடுத்திருந்ததெனப் பதிற்றுப்பத்து முதலிய பல நூல்களுங்கூறுதலேயன்றிப் புறநானூற்றுள் ‡ "விழுநீர்வேலிநாடுகிழவோன்" எனச் சேரனைக்கூறினமையாற் குடபுலமாகிய சேரமண்டலம் வேலிபோ லரணுபமைந்த குடகடலால் வரையப்பட்டதென ஒருபுறத்தின் எல்லையும் நிராக்ஷேபமாயறியப்பட்டது. இனி அந்நாட்டின் மற்றொருபுறத்தெல்லை யாதாயிருக்குமோ

§ மணிமேகலை 22-ம் காதை 25-ம் அடிமுதற்பார்க்க.

‡ புறநானூறு செ-ள், 13.

வெனவாராயின் அது அநுபவசித்தமாகவே அந்நாட்டிற்கு இயற்கையரணுபமைந்துள்ள மேற்குமலைத்தொடரென வழங்கும் மலயபர்வத வரிசையேயாகுமென்பது யாவருமறியலாம்.

அன்றியும், இக்குடபுலத்தைப்பற்றிப் புறநானூற்றுள், பதினேழாம்பாட்டில், "குலையிறைஞ்சியகோட்டாழை, அகல்வயல் மலைவேலி, நிலவுமணல்வியன் கானல்......................வரையாவீகைக் * குடவர் கோவே" என்றதனாற் கடல்வேலி யொருபுறமிருப்பதைத் தழுவிக்கொண்டே மற்றொருபுறம் மலைவேலியுமுடையதாகக் குடவர்கோவுக்குரிய தொண்டிராஜ்யமாகிய குடபுலத்தைவிசேடித்தமையால் மலையும், கடலுட் வேலியாகவரைந்துகொள்ளப்பட்ட மலைமண்டிலமே குடவர் கோவுக்குரிய குடபுலம் என்பது பெறப்படுகிறது.

இன்னும் இக்குடபுலம் மலைவேலியிற்சிறந்ததென்பதை, ‡ "சீருடைத்தேத்த முனைகெடவிலங்கிய, நேருயர்நெடுவரை அயிரை" என்பதனானும் அறியலாம். இப்பாட்டில் 'சீருடைத்தேத்த' என்றதனால் நாட்டினிடைப்பட்டிருந்து சீரழிக்காது ஒருபுடையொதுங்கி வேலிபோலரணாய்வாய்ந்த மலையென்பதும், 'முனைகெட' என்றதனால் சிறுகாப்பிற் பேரிடத்ததாகுமரணமென்பதும், விலங்கிய என்றதனால்

---

* இப்புறப்பாட்டினுள் குடவர்கோவென்றதற்கு, குடநாட்டார்கோவென்று உரையெழுதப்பட்டிருக்கிறது. "குடநாடு" என்பது கொடுந்தமிழ் நாட்டினுளொன்றாகிய குடநாட்டைமட்டுஞ்சுட்டாது குடபுலமுழுதும் சுட்டவல்லதென்பதை, "குடகக்கோ" என்பதற்கு அடியார்க்குநல்லார் குடதிசைக்கோவென்று உரையெழுதினமையாலும், இது குடபுலமுழுதையுமுணர்த்துமென்பதை, "வஞ்சிமாநக" ரின் பக்கம் 17 வரி 19-ல் தாமே ஒப்புக்கொண்டிருப்பதாலுமறியலாம். "தண்கடல்வேலிநின்குடநாடற்றே" என்புழிக் குடநாடென்பதற்குக் கொடுந்தமிழ்நாட்டினுளொன்றெனப்பொருள்பண்ணிக் கொள்வதுபோல இந்த அப்பொருள்கொள்ளலியலாதென்பதை இச்சேரன் வேந்துதந்தபணிதிறையாற் சேர்ந்தவர்கடும்பார்த்தும் ஓங்குகொல்லியோரடுபொருநனாகிய சேரசன் என்பதனாலறிக. இங்ஙனங் குடவர்கோவென்புழிக் கொடுந்தமிழ்க்குடநாடனென்றே பொருளாமெனக்கொள்ளுதல் அபார்த்தமாகுமென்பது பின் "குடவர்கோமான்" என்னும் சொற்பொருளாராய்ச்சியிற் காட்டப்படும்.

‡ பதிற்றுப்பத்து செய்யுள் உக.

பிறர்நாட்டோடு தன்னாடு ஒருவாற்றானும் விரவாதவண்ணம் குறுக்கிட்டுக்கிடப்பதென்பதும், நேருயர்நெடுவரை என்பதனால் உலகப்பிரசித்தமா யாருமறியும்படி செவ்வேயுயர்ந்து தன்னாட்டினது நெடுமையிற்குறையாது நீண்டுகிடப்பதென்பதும் பெறப்பட்டன.

இவ்விலக்கணங்களையெல்லாமுடையது அயிரை, மலயம், பொதியில், சையம் என்னும் தொடக்கத்துப் பலபெயர்களையும் பல சிகரங்களையுமுடைய குடவரை எனவுணர்க. இதற்கு மலயம் என்றபெயருண்டென்பதை "நீடுநிலைமலயம்பிற்படச்சென்று" என்ற சிலப்பதிகாரத்தா லறியலாம். நீடுநிலையென்று சிறப்பிக்கப்பட்ட இம்மலையினது நீட்சி குமரிக்கோடுதொடங்கி விந்தியமலையுங்கடந்து நீண்டதென்பதை வான்மீகத்தில், காவேரிபிறக்கும் மலைத்தொடரையும் அதற்கும் வடக்குள்ள மலைத்தொடரையும் மலயபர்வதமென்று வழங்குதலா லறியலாம். இதனாலேயே ஸஹ்யபர்வதமும் மலயபர்வதமும் ஒன்றென்றறியலாம்.

இது இத்துணைநெடிதாயிருப்பதுபற்றியே *"அயிரைநேரேவரைபோலத் தொலையாதாகநீவாழுநாளே" எனத் தலைவனுக்கு மிகநீண்டிருக்கவேண்டிய வாழ்நாளுக்குவமையாகக் கூறப்பட்டதெனவுணர்க. இவற்றால் இத்தகைய நெடுமைவாய்ந்த குடவரையென்னும் மலயபர்வதத்தைக் கீழ்பால்வேலியாகவுடையநாடே குடபுலமென்று சொல்லப்படும் சேரராஜ்யமெனவறிக.

வேலியென்பது ஒருபுலத்தின் நடுவிலில்லாமல் அப்புலத்துக்குப் பாதுகாப்பாய்ப் புறத்திலடுத்திருப்பதாகவே கொள்ளப்படுமாதலால் கொங்கும் குடபுலமும் ஒருபுலமாகாதென்றேயுணரவேண்டும். ஒருபுலமாயிருக்குமாயின் அப்புலத்தினிடையே குறுக்காகக்கிடக்கும் குடக்குமலைத்தொடரை அப்புலத்துக்கு வேலியெனச்சிறப்பித்து நல்லிசைப்புலவர்கூறுங்கூற்றுப் பொருந்துவதாகுமா! குடவரையைக் குடபுலத்துக்கு வேலியென நல்லிசைப்புலவர் சிறப்பித்தமையால் அம்மலை அப்புலத்தின் இடைப்பட்டதன்றாமென்பதை "வருபுனலும் வாய்ந்தமலையும்" என்ற குறளில் வாய்ந்தமலையென்றதற்குப் பரிமே

* பதிற்றுப்பத்து செய்யுள் எ௦.

வழகரெழுதிய விசேடவுரை § யானு மறியலாம்.

இங்குக்கூறியவாற்றால், குடவரைத்தொடராலும், கடலாலும் வேலிபோன்று வரையப்பட்ட கடன்மலைநாடே குடபுலம் என்பது பெறப்பட்டது.

இனிக் கொங்குநாட்டைக்கூறுமிடத்து, அது † "கடல்போக்கி நிலமூன்றிற் குலவுசிறப்பெய்தியது கொங்குவளநாடு" எனக் கடலில்லாத நடுநாடாகவே பிரமாணத்துடன் வஞ்சிமாநகருடையாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இதுவேயுமன்றி, "வடக்குத்தலைமலையாம் வைகாவூர் தெற்குக்
குடக்குப்பொருப்புவெள்ளிக்குன்றம்—கிடக்குங்
களித்தண்டலைமேவுங் காவிரிசூழ்நாட்டுக்
குளிர்த்தண்டலையளவுகொங்கு"

என்ற பழம்பாடலாலும், கொங்கினை இடைநாட்டுள்ளதாகவே காட்டி அதனுட் கீழ்பாற் சோணாட்டினொருபகுதி சேர்ந்திருப்பதாகவே குறிக்கப்பட்டுள்ளது.

இதுவே "கொங்கிளங்கோசர்தகங்கள்நாடு" எனச் சேரநாட்டினின்றும் வேறுபட்டதாகச் சிலப்பதிகாரத்திலும், சேரகுலத்தவரான இளங்கோவடிகளாற் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதலாற் **கடலில்லாத அகநாடாகிய** கொங்கும், **கடலுடைய** புடைநாடாகிய குடபுலமும் தனித்தனி மாறுபட்ட வெவ்வேறிலக்கணங்களையுடையவாகி, இடையே கிடக்கும் குடக்குமலைவேலியாலும் பிரிக்கப்பட்டு, வேறுபட்டுவிட்டமையால் அவை நிறுத்த சொல்லுங் குறித்துவருகிளவியுமாகிய எழுவாயும் பயனிலையுமாயினைவதற்கு ஒருவாற்றானும் பொருந்தாமையால், "கோங்கு குடபுலம்" என்று கூறுங்கூற்று "ஆ குதிரை" * என்பதுபோல் அநந்துவயமாய் அப்பிரமாணமாயிற்று.

---

§ "இடையதன்றி யொருபுடையதாகிலும், தன்வளந்தருதலும், மாரிக்கணுண்டநீர் கோடைக்கணுமிழ்தலு முடைமைபற்றி வாய்ந்தமலை யென்றார்" என்று பரிமேலழகர் விசேடவுரையிற் கண்டது.

† வஞ்சிமாநகர் 120-ம் பக்கம் பார்க்க.

* தருக்கசங்கிரகம் எஉ-ம் பத்தியிற்பார்க்க.

இதுகாறும் செய்த வாதகக்ஷிமுடிவுரையின் ஏகதேசமான 'கொங்கு குடபுலம்' என்பதன் வாக்கியார்த்த விசாரணையாலேயே கொங்கு குடபுலமாகாதென்பது பெறப்பட்டமையால், கொங்குவஞ்சி குடபுலவஞ்சியாகாதென்பதும் கூறவேண்டாதாயிற்று.

ஆயினும் கொங்கு குடபுலமாமென்பதற்கும், கொங்குவஞ்சி குடபுலவஞ்சியாமென்பதற்கும் வாதகக்ஷியார், பிரமாணங்களாகக்காட்டும் மேற்கோள்களும், யுக்திவாதங்களும், எதிர்வாதகக்ஷிக்கனுகூலமான பிரமாணங்களுக்கு அசித்திசொல்வனவும் மிகப் பலவுள்ளன. இனி அவற்றையும் முறையே ஆராய்வாம்.

தொடரும்.

சேந்தமிழ்.

சாஸ்திரக்குறிப்புகள்.

"மாரிகாலங்களும் கோடைகாலங்களும்" நாம் நமதுபாலியத்திற் கண்டபடி இப்போதிருக்கவில்லை, யென்று பலர்சொல்ல நாம் கேட்டிருக்கிறோம். ஆனாற் காலக்குறியறிவிக்கும் சாஸ்திர ஆதாரங்களைக்கொண்டு பரீக்ஷைபண்ணினோமானால், உலகத்தின் சீதோஷ்ணநிலை மழை பனியாதியவை முன்போலவே இருக்கின்றன. மாறுபாடில்லையென்று தெரிகின்றது. 1908-ஹு-த்திற் லண்டனிற் கூடிய பிரிட்டிஷ் அஸோஸியேஷன் மீடிங்கில் ஸர் ஜான் மூர் என்பவர் "சென்றஆறு நூற்றாண்டுகளாகப் பிரிட்டிஷ் தீவுகளின் சீதோஷ்ண நிலைமையில் யாதொரு மாறுபாடும் உண்டாகவில்லையென்று ஆதாரங்கள் காண்பிக்கின்றன" என்று உறுதியாய்க் காண்பித்தார். ஆனால் **பிரான்கிஸ் பேகன்** என்பவரது ஆராய்ச்சியை யநுசரித்து "சுமார் 35 வருஷங்கட்கு ஒருதரம் சீதோஷ்ண முதலான இயற்கை நிலைகள் மாறுபடும் இயற்கையைக் கொண்டிருக்கின்றன வென்றும், இதே சீதோஷ்ண நிலைமையின் மாறுபாட்டிற் பொது ஜனங்கள் கொண்டுள்ள நிலையான நம்பிக்கைக்குக் காரணமாக இருக்கலாம்" என்றும் தெரிகிறது.

அப்படிப் பாடசாலையைச் சுற்றிச் சுவரில்லாமற் போதுமான இடமுள்ள பாடசாலைகளில், முதலில் வேலி போட ப்ரயத்தனம் செய்ய வேண்டும். அப்படி வேலியாகப்போடுவதற்குக் கொடுக்காப்புளி, ஆமணக்கு, மருதாணி, சீமைக்கள்ளி, வாதராஜா, சவுக்கு முதலிய நாற்றுகள் அல்லது குச்சிகள் கொண்டுவந்து சுற்றும் வாய்க்காலாக வெட்டி அதில் ஊன்றிவைக்கலாம்.

இம்மாதிரி வேலி தயாரானபின், போதுமான இடமிருந்தாலும் சரி, அல்லது சொற்ப இடமிருந்தாலும், தோட்டத்தை மூன்றுவிதமாகப்பிரித்துக்கொண்டு, அதில் ஒரு பாகத்தை அழகுக்காகவென்றும், (இது பாடசாலையின் எதிரிலிருக்கவேண்டும்) ஒருபாகத்தைப் பரிசீலனைக்காகவென்றும், ஒரு பாகத்தைப் பிள்ளைகளுக்காக என்றும் வகுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதமாகப் பிரித்தபின், நிலத்தைக் கோல்கொண்டாவது கயிறுகொண்டாவது அளந்து குறைந்தது 3 அடி அகலம் 6 அடி நீளமுள்ள பாத்திகளாகக் கட்ட வேண்டும். ஒவ்வொரு பாத்திக்கும் மத்தியில் நடந்துபோகப் பாதையு மிருப்ப தவசியம். பாத்திகட்டியானபிறகு ஒவ்வொரு பாத்தியையும் நன்றாய்ச் சுமார் 3 அடி ஆழம்வரை கொத்தி, மண்ணிலுள்ள ஓடு கற்கள் முதலியவைகளைப் பொறுக்கிவிட்டு, உப்புமண்ணாகவாவது களிமண்ணாகவாவது இருந்தால் அவற்றை மாற்றும்பொருட்டு முறையே மணலும் சாம்பலும், மண்ணும் சாம்பலுமாகக் கலந்துகொண்டு பாத்தியிற் போட்டுப் பிறகு பயிரிடலாம்.

அழகுக்காகவென்று வைத்திருக்கும் தோட்டத்தைப் பொதுவாய்ப் பிள்ளைகளைக் கவனித்துவரச்செய்தாலும், மற்ற இரண்டு தோட்டங்களிலும் ஒவ்வொரு பையனுக்கும் பாத்திகொடுத்துக் கவனித்துவரச் செய்யவேண்டும். ஏனெனில், பரிசீலனைக்கென்றுள்ள பாத்தியில், பாடப்புத்தகங்களில் வரக்கூடிய ஸ்தாவரங்களைப் பயிர் செய்து பரிசீலனைசெய்வதற்கும், பிள்ளைகள்தோட்டம் என்றுள்ளதில் அந்தந்தவூரில் விசேஷமாய்ப் பயிரிடக்கூடியவற்றைப் பயிர் செய்து விளையும் மாதிரி முதலியவற்றைக் கவனிக்கச் செய்வதற்கும் அநுகூலமாகும்.

மேலேகண்ட வேலைகளை மேல்வகுப்புப் பிள்ளைகளையே கூடு மானவரையிற் கொஞ்சம் கொஞ்சமாய் நாளடைவிலேயே செய்யும்படி செய்து, உபாத்தியாயர் அடிக்கடி மேற்பார்த்து, அவர்களாற் கவனிக் கப்படாத குறைவாயுள்ள அலுவல்களைமட்டும் ஒவ்வொரு மாணாக்க னுக்கும் எடுத்துக்காட்டிச் செய்யச்சொல்லுவது சிலாக்கியமாகும்.

இவ்வாறெல்லாம் பாத்திகளுக்கு இடந்தயாரித்தது முதற் பின்பு நடக்கும் ஒவ்வொரு அலுவலையும், தினசரி கவனித்துத் தெரிந்து கொள்ளும் ஒவ்வொரு விஷயத்தையும், தேதியுடன் ஸரிவரக்குறித்து வரும்படி இதில் வேலைசெய்யும் ஒவ்வொரு மாணாக்கனுக்கும் திட்டம் செய்து, அதை உபாத்தியாயர் கவனித்துத் தவறுதலானவற்றைத் திருத்திக்கொள்ளச்செய்துவந்தால், தோட்டவேலை (Garden work) ஒருவாறு பிரயோஜனப்பட்டதாகும்.

G. Narayanaswamy Ayer,
Teacher,
S. E. School.

விடுகதைவினா.

——;(o)(*)(o);——

அக்கரம் ஐந்தில் அமைந்ததோர் சொல்லாம்
அதிற்கடை இரண்டெழுத் தகன்றால்
நக்கனார் சடையில் அணிந்திடும் பொருளாம்
நடுவிலார் மூன்றெழுத் தகன்றால்
தக்கதோர் மாதம் ஆகுமாம் பின்னர்ச்
சார்ந்தநான் கெழுத்துமே யகன்றால்
மிக்கதாம் இரக்கக் குறிப்புரை யாகும்
விளங்குமா றுரைத்திடு வீரே.

S. சுப்பையா.
கோனுபட்டு.

சுலக்ஷணா.

[௩௨ம் பக்கத் தொடர்ச்சி]

"தாங்கள் இப்பொழுது ஒருவரையும்பார்க்க மாட்டீர்கள் என்று நான் அவளுக்குக் கண்டிப்பாய்ச் சொன்னேன். அவள் ஒரு நிமிஷத்திற்காவது தாமதமில்லாமல் தங்களை அவசியம் பார்க்கவேண்டுமாம். ஏனெனில் ஒன்பது மணிக்கு அவள் நாலைந்து மைல் தூரத்திற்கப்பாலுள்ள ஓரிடத்திற்குப்போய்ச் சேரவேண்டுமாம்," என்று அவன் இரகசியமாய்ப் பதிலளித்தான்.

இந்தச் சம்பாஷணை அங்கிருந்தவர்களில் ஒருவருக்கும் கேட்கவில்லை. ஆனால் விமலா மாத்திரம் இதில் ஏதோ விசேஷம் இருக்கிறது என்று எண்ணி அதை அறிந்துகொள்ள ஆவலுள்ளவளாயிருந்தாள். சுலக்ஷணா எழுந்து, அவசியகாரியமாய் இரண்டு நிமிஷம் வெளியே போய்விட்டு வருவதாய் விருந்தினர்களிடம் சொல்லிவிட்டு, வேலைக்காரனுடன் போனாள்; போய் இரண்டு மூன்று நிமிஷங்களானதும் திரும்பிவந்தாள். விமலா தன்தாயை உற்றுநோக்கினாள்; முகம் வெளுத்திருந்தது. சற்று முன் மனக்குழப்பமடைந்தவள்போற் காணப்பட்டாள். அவள் பேசும்பொழுது அவளுடைய குரலால் அவள்மனதில் ஏதோ தொந்தரவு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

சுலக்ஷணா வந்ததும் போஜனம் பரிமாறப்பட்டது. எல்லோரும் திருப்தியாகச் சாப்பிட்டார்கள். சாப்பாடு வெகு தடபுடலாயிருந்தது. காய்கறி வகைகள் கணக்கிட்டுமுடியா. ஊறுகாய்த்தினுசுகள் வேறு வேறானவை. பச்சடிவகைகள் மிச்சமும்சொச்சமும். அப்பளம் வடைகள் அனந்தம் அனந்தம். பாயசம் ரசங்கள் பலவகையாகும். இத்தகைய போஜனம் முடிந்ததும் எல்லோரும் தாம்பூலம் தரித்துக் கொண்டார்கள். தாம்பூலம் தரித்துக் கொள்ளுமிடத்தில் மதிமானும் சூடாமணியும் ஒருவரையொருவர் சந்தித்தார்கள்.

சூடாமணி, "என்ன சமாசாரம் பாலாமணியைப் பற்றிய விஷயம் என்னவாயிற்று?"

மதிமான், "எல்லாம் என்னிஷ்டப்படியே முடிந்தது."

விருந்து முடிந்து, வந்தவர்கள் எல்லோரும் வீட்டிற்குத் திரும்பினார்கள். விருந்து சாப்பிட்டுவிட்டுப் போனவர்களில் ஒருவர் வழியில் ஒரு சினேகிதரைச் சந்தித்தார்.

சினே, "ஐயா! எங்கிருந்து வருகிறீர்?"

சா, "நான் புவனலையம் ஜமீந்தார் வீட்டில் நடந்த விருந்திற்குப் போய்விட்டுத் திரும்பி வருகிறேன்."

சினே, "சாப்பாடு எப்படி?"

சா, "அதை ஏன் கேட்கிறீர். ஓரங்களில் வைக்கப்பட்டிருந்த கறிகளை எட்டி எடுப்பது எனக்கு மிகவும் கஷ்டமாயிருக்கும்படி அவ்வளவு பெரிய இலைகள் போடப்பட்டிருந்தன. இலைகளிற் கறிகள் நெருக்கமாய் இரண்டு மூன்று வரிசைகள் வைக்கப்பட்டிருந்தன. மரக்கறி வகையில் இருபத்திரண்டும் மாம்சவகையிற் பன்னிரண்டும் ஆகக்கறிகளின் எண்ணிக்கை முப்பத்துநான்கு. இதனோடு சர்க்கரைச் சாதம், தயிர்ச்சாதம், சம்பாச்சாதம், பாற்சாதம், புளியோதரை முதலிய வர்க்கான்னங்களும், மா, பலா, வாழை என்ற முப்பழமும், மாங்காய், எலுமிச்சங்காய், இஞ்சி, பச்சைமிளகாய், முதலிய ஊறுகாய்கள், மோல்மீன் நாரத்தங்காய், கும்பகோணம் ஊறுகாய் முதலியவைகளும், அப்பளம் வடை முதலானவைகளும் இலையில் வரிசையாய் வைக்கப்பட்டிருந்தன. சாதத்திற் பருப்பும் நெய்யும் ஊற்றின பின் அதிலேசான தங்கத்தகடுகள் போடப்பட்டன. குழம்பு வகை எத்தனை? சாம்பார், மோர்க்குழம்பு, வத்தற்குழம்பு, கருணைக்கிழங்கின் குழம்பு, பொரித்தகுழம்பு, பக்குவடாக்குழம்பு, சொதி, எண்ணெய்க் கத்தரிக்காய்க் குழம்பு, மல்லிகைப்பூ ரசம், ரோஜாப்பூ ரசம், சூப்பு (Soup), மாம்சக்குழம்புகளில் ஐந்தாறுவகை ஆகப் பதினறு பதினேழு தினுசுக் குழம்புகள். தயிர் கலயம் கலயமாக இலைகளிற் கவிழ்க்கப்பட்டது. ரவைப்பாயசம், பிசினரிசிப்பாயசம், சாமைப்பாயசம்

முதலிய பாயசவகைகளைச் சாப்பிடுவதற்குள் எனக்கு ஆயாசம் உண்டாகிவிட்டது. விருந்தாளிகள் போஜனம் முடிந்து எழுந்திருந்த பொழுது, சுமார் மூன்றுமுழநீளம்இரண்டுமுழஅகலமுள்ள ஒவ்வொரு இலையும் பதார்த்தங்களால் நிறைந்திருந்தது. இன்று எச்சிற்குறவர்களுக்கும் நாய்களுக்கும் ராஜபோஜனம்கிடைக்கும்."

சினே, "தங்கம் சரீரத்திற்குப் புஷ்டியைத் தருகின்றதா? அல்லது நாவிற்கு உருசியாயிருக்கின்றதா? தங்கம் பரிமாறினேம் என்ற வீண்பெருமை எதற்கு? நீர் சொல்வதற்கு இவ்வளவு நேரம் சென்றதே. அவ்வளவு பதார்த்தங்களையும் ஒரு மனிதன் ஒரே சமயத்திற் சாப்பிடமுடியுமா? நீர் கடைசியாகச் சொன்னபடி அவ்வளவு பதார்த்தங்களும் வீணே குப்பையில் எடுத்தெறியப்படுகின்றன. இவ்விதமாய் வீண்செலவு செய்வதில் இ ர ண் டு கெடுதல்கள் ஏற்படுகின்றன. அவற்றுள் ஒன்று பொருள் நஷ்டம். இப்பொழுது விருந்து செய்த புவனலயம் ஜமீந்தாரைப் போல பணக்காரர்களாயிருந்தால், அவர்கள் திரவியநஷ்டத்தைப் பொருட்படுத்த மாட்டார்கள். ஒருவன் ஏராளமான பதார்த்தங்களை வீணுக்குவதனல் அனேகருக்குக் கஷ்டம் ஏற்படுவது மற்றொரு கெடுதல். அனேகருக்குக் கஷ்டம் ஏற்படுவது எப்படி என்ற கேள்வி உண்டாகலாம். அ த ற் கு ஒருதாரணம் காட்டுவோம். ஒரு கிராமத்தில் ஒரு த ன வா ன் வீட்டில் விசேஷம் நடக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அவன் அந்தக்கிராமத்தில் அகப்படக்கூடிய பால், மோர், தயிர் எல்லாவற்றையும், அதிக விலை கொடுத்தாவது, வாங்கிவிடுகிறுன். அதனல் வழக்கமாய் அவற்றைச் சாப்பிடும் அனேகருக்கு அவை அகப்படாமற் போகின்றன. இது போலவேதான் அனேகருடைய வயிற்றை நிரப்ப வேண்டிய மற்றைய பதார்த்தங்களும் இவ்வித டம்ப விருந்துகளிற் சோம்பேறிகளான எச்சிற்குறவர், நாய், பன்றி முதலியவற்றின் வயிறுகளையும், குப்பைக் குழிகளையும் நிரப்புகின்றன."

சா, "நீர் சொன்னதெல்லாம் உண்மையான விஷயந்தான். எல்லோரும் இவ்வுண்மையை அறிந்து வீண்செலவு செய்யாதிருந்தால்

உலகத்திற்கு எவ்வளவோ நன்மை ஏற்படும். இப்பொழுது நேரமா கிறது நான் போய்வருகிறேன்."

இருவரும் தம்தம் வழியை நோக்கிச் சென்றார்கள். விருந்தி னர்களெல்லாம் அரண்மனையை விட்டகன்ற பிறகு, விமலா வேலைக் காரனை அழைத்து அவன் தன் தாயினிடத்திற் சொல்லிய சமாசாரம் என்னவென்று கேட்டாள்.

வேலை, "ஒரு ஸ்திரீ தங்கள் தாயை அவசியம் பார்க்கவேண்டு மென்றாள்."

விமலா, "எதற்காக?"

வேலை, "எனக்குத் தெரியாது."

விமலா, "அந்த ஸ்திரீ எப்படி இருந்தாள்?"

வேலை, "அவள் கந்தைத் துணிகளை உடுத்திக் கொண்டு ஒரு பிச்சைக்காரியைப்போற் காணப்பட்டாள்."

உபாத்தியாயரும் சிஷப்பிள்ளையும்.

சிந்தாமணியைப் பற்றிச் சில இடங்களிற் சொல்லியிருக்கிறோம். அவன் அழகான ரூபத்தையும், அன்பான மனத்தையும், தீவிரமான புத்தியையும் உடையவன்; சித்திரம் சங்கீதம் முதலியவைகள் கற்பிப்ப தனுல் அவன் ஜீவனம்செய்துவந்தான் என்று முன்னமேயே சொல்லி யிருக்கிறோம். பார்ப்பதற்கு அவன் ஒரு பிரபுவைப்போற் கம்பீர மான தோற்றத்தை உடையவனுயிருந்தான். உயர்ந்த குடும்பங்களிற் கற்பித்தபடியால் அவனுக்கு ஏராளமான வரும்படி கிடைத்தது. ஒரு நாள் அவன் மத்தியானம் ஒரு மணிக்கு நீலாம்பாள் வீட்டிற்குப் போனன்.

அம்புஜம், ஒரு அறையில் உட்கார்ந்திருந்தாள். சிந்தாமணி வந்ததும் சித்திரம் எழுதுவதற்கு வேண்டிய கருவிகளையெல்லாம் எடுத்து மேஜையின் மேல் வைத்தாள்.

அம்புஜம், "ஐயா நான் இந்தப் படத்திற் கொஞ்சந்தான் எழுதி யிருக்கிறேன். இன்று முடித்துவிடலாமென்று நினைக்கிறேன்,"

என்று சொல்லி அரைகுறையாயிருந்த ஒருபடத்தைக் கையி லெடுத்தாள்.

சிந்தாமணி, "நான் முந்தின நாள் வந்தபொழுது இருந்தபடியே இப்பொழுதும் இருக்கிறது. அதற்கப்புறம் படத்தைத் தொடவில்லை போலும். ஆனல் இன்றைக்கு ஒருமணிநேரம் செலவழித்தாற் கொஞ்சம் எழுதலாம்."

அம்புஜம், "தங்களுக்கு வேறே அலுவல் இல்லாவிட்டால், இரண்டுமணிநேரம் இருந்து படத்தை முடித்துவிடலாம்."

சிந்தாமணி, "உனக்காக நான் சந்தோஷமாய் எத்தனை மணி நேரம் இருக்கவேண்டுமென்றாலும் இங்கே இருப்பேன்."

சிந்தாமணி இந்தவார்த்தைகளைச் சொன்ன மாதிரியைக் கண்ட அம்புஜத்திற்கு முகம் வேறுபட்டு அதில் ஒருவிதமான தோற்றம் உண்டாயிற்று. அவள் முகத்தை மறைத்துக்கொண்டு சித்திரம் எழுதுவதற்கு எழுதுகோலை எடுத்தாள். கை ஆடினபடியாற் படத்தில் மைகொட்டிப்போயிற்று. உடனே சிந்தாமணி அதைத் திருத்துவதற்கு அவளிடமிருந்த பேனவைவாங்கக் கையைநீட்டினன். அவள் அதைப் படத்தின்மேற் போட்டுவிடவே அது புரண்டு படமெங்கும் கெட்டுப்போயிற்று.

சிந்தாமணி, "என்னை மன்னிக்கவேண்டும். அவசரமாய்க் கேட்டதனற் பேன விழுந்துவிட்டது."

அம்புஜம், "இல்லை அது தங்களுடைய குற்றமல்ல," என்று சொல்லிக் கையை நீட்டினள். சிந்தாமணி அந்தக் கையைத் தன்கையாற் பிடித்தான். அம்புஜம் சிந்தாமணி கையிலிருந்து தன் கையை எடுக்கவில்லை. சிந்தாமணி அவள் கையைக் கொஞ்சநேரம் வைத்திருந்து, பிறகு மெதுவாய் அதை முத்தமிட்டான். உடனே கையை விட்டுவிட்டு, தான் பெரியகுற்றம்செய்ததாய் எண்ணி முழங்காற் படியிட்டு, தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டான். அம்புஜம் தன் கையை மறுபடியும் சிந்தாமணியினிடம் கொடுத்துவிட்டு அழுதுகொண்டே சொல்லுகிறள், "நாம் இவ்விதமாய் இருப்பதை யாராவது

பார்த்தால் என்ன சொல்லுவார்கள். மேலும் நான் வேறொருவருக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கிறேன்." சிந்தாமணி எழுந்திருந்து, "அம்புஜம்! ஏன் அழுகிறாய்? உன்னுடைய வார்த்தைகள் எனக்கு நம்பிக்கையை உண்டுபண்ணுகின்றன. இது என்ன கனவா நனவா?" என்று சொன்னான்.

கண்ணீரோடு அவனைப்பார்த்து அம்புஜம் சொல்லுகிறாள், "நான் அதிகத்துக்கமாய் இருக்கிறேன். என்னை விட்டுப்போங்கள். இப்பொழுது நடந்ததையெல்லாம் மறந்துவிடுங்கள்."

"உன்னைவிட்டுப்போகச் சொல்லுகிறாய். மோக்ஷமே சமீபத்தில் வந்துவிட்டது போலிருக்கும் இந்தச் சமயத்திலா உன்னை விட்டுப் போவது?" என்று துக்கமான குரலோடு சிந்தாமணி சொன்னான்.

அம்புஜம் சற்றுநேரம் சிந்தாமணியின் அழகிய முகத்தைப்பார்த்தாள். பிறகு கண்ணீரைத் துடைத்துக்கொண்டு சொல்லுகிறாள், "நான் என் மனதில் இருக்கிறதையெல்லாம் உங்களுக்குச் சொல்ல முடியாது. அப்படிச்சொன்னால் எனக்கு எப்பொழுதும் துக்கம் உண்டாகிவிடும்.

சிந்தாமணி, "இப்பொழுது உன்னை விட்டுப்போனால் எனக்கும் தீராத்துயரம் உண்டாகும். எனக்கு முதவிற் கொஞ்சம் நம்பிக்கையை உண்டுபண்ணி, பிறகு அதைமறுப்பது ஆகாயத்தில் உயரத்தூக்கிக் கொண்டுபோய் ஆழக்குழியிற் போட்டதுபோல் இருக்கிறது."

அம்புஜம், "இப்பொழுது நடந்தவைகளைப் பற்றி நான் வருத்தப்படவில்லை."

சிந்தாமணி, "அப்படியானால் நீ என்னை நேசிக்கிறாய்" என்று மிகவும் சந்தோஷமாய்ச் சொல்லி அவள் கையைப்பிடித்து ஓயாமல் முத்தமிட்டான். "சற்று யோசித்துச்சொல்லு. என்னை மணப்பதாயிருந்தால் நீ அடையவிருந்த புவனலயம் ஜமீந்தாருடைய ஆஸ்திபட்டம் எல்லாவற்றையும் இழக்கவேண்டி நேரிடும். நான் ஏழை," என்று சிந்தாமணி சொன்னான்.

"தங்களை மணந்தால் என் மனப் பொக்கிஷத்தைக் கொள்ளை

கொண்ட கோமானின் மனைவியாகின்றேன்," என்று அம்புஜம் குயில் போன்ற குரலுடன் இனிமையாகச் சொன்னாள்.

சிந்தாமணி, "நீ ஒரு தாழ்ந்த சித்திரமெழுதுவோனை விவாகம் செய்துகொள்வதற்காக ஜமீன் பட்டத்தையும், ஏராளமான ஆஸ்தியையும், அந்தஸ்தையும் வேண்டாமென்று வெறுக்கிறாய். நான் உனக்கு இதற்குப் பதிலாய் என்ன செய்யப்போகிறேன். என்னுடைய இருதயத்தைத்தான் உனக்குக் கொடுக்கமுடியும். ஆஸ்தி அந்தஸ்து முதலியன எனக்குக்கிடையா."

அம்புஜம், "தங்களுடைய இருதயத்தைத்தவிர வேறு என்ன எனக்கு வேண்டும்? அதுவே எனக்குப் பெரிய செல்வமும் உயர்ந்த அந்தஸ்துமாம்."

இவ்விதமாய் இருவரும் சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு நேரமாய்விட்டதென்று சிந்தாமணி நீலாம்பாள் வீட்டை விட்டுச் சென்றான்.

ஆச்சரியமான சம்பவம்.

இப்பொழுது மணி மூன்றாயிற்று. சுலக்ஷணையின் புத்திரிகளுக்குச் சித்திரம் எழுதக் கற்பிப்பதற்காக மூன்றுமணிக்கு வருவதாய்ச் சிந்தாமணி சொல்லியிருந்தான். ஆகையால் அவன் புவனாலயம் ஜமீந்தார் வீட்டை நோக்கி நடந்தான். அவனுடைய எண்ணமெல்லாம் அம்புஜத்தின் மேலேயே இருந்தது. அவனுக்கு வழியிற் போகிறவர்களைத் தெரியவுமில்லை. அவர்கள் பேசும் சப்தம் கேட்கவுமில்லை. அவனுடையமனம் அம்புஜத்தினிடம் இருக்கச் சரீரம் மாத்திரம் நடந்து சென்றது. இவ்விதமாய்ச் சென்றமையாற் சுலக்ஷணையின் வீடு போய்ச்சேர மணி நாலாயிற்று. நேரமாயிற்றே வீட்டிற்குத் திரும்பி விடலாமா என்று அவன் நினைத்தான். ஆனால் நேரமானதற்கு ஏதாவது சாக்குச் சொல்லிவிட்டு, மறுநாள் எப்பொழுது வருகிறதென்று கேட்டுக்கொண்டுபோகலாமென யோசித்து, ஜமீந்தார்வீட்டுக் கதவைத் தட்டினான். ஒருவேலைக்காரன் அவனை உள்ளே அழைத்துச்சென்று விமலாவிற்கும் அசிதாவிற்கும் சித்திரமெழுதக்

கற்பிக்கும் அறையிற் கொண்டுபோய்விட்டான். சிந்தாமணி அங்கே அவர்களுக்குப் பதிலாகச் சுலக்ஷணா இருப்பதைக்கண்டான்.

சுலக்ஷணா, "இன்று நீ நேரங்கழித்து வந்திருக்கிறாய்."

சிந்தாமணி, "அம்மா, தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும். கொஞ்சம் அலுவலாய் இருந்துவிட்டேன்."

சுலக்ஷணா, "குற்றமில்லை. நான் அதற்காக உன்னைக் கோபித்துக் கொள்ளவில்லை. என்னுடைய புத்திரிகள் உனக்காகக் கொஞ்ச நேரம் காத்துக்கொண்டிருந்தார்கள். நீ வராததனாற் கொஞ்சதூரம் வண்டியிற் சவாரி போயிருக்கிறார்கள். ஆனால் உட்காரு." என்று சொல்லி அருகிலிருந்த நாற்காலியொன்றைக் காட்டினாள்.

சிந்தாமணி, "இல்லை நான் போகிறேன். நாளைக்கு எத்தனை மணிக்கு நான் இங்கு வரவேண்டும்?"

சுலக்ஷணா, "நாளை இரண்டுமணிக்கு வா. சிந்தாமணி உட்காரு. நான் உன்னிடத்திற் பேசவேண்டும்" என்று சொன்னாள். அவளுடைய குரல் ஒருவிதமாக இருந்தது. சிந்தாமணியின் மனதிற் குழப்பம் உண்டாயிற்று. ஆனால் அதன் காரணம் அவனுக்குப் புலப்படவில்லை. சுலக்ஷணா சொன்னபடி அவன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான். அவள் தன்னுடைய நாற்காலியை அவனருகில் இழுத்துப் போட்டாள்.

சுலக்ஷணா, "சிந்தாமணி உன்னிடத்தில் முக்கியமான காரியமாய்ப் பேசப்போகிறேன். அவசியம் நான்சொல்வதைக்கேட்கஉனக்கு ஆச்சரியம் உண்டாகும். ஆனால் நீ கவனமாய்க் கேட்கவேண்டும்."

இவ்வாறு பேசும்பொழுது அவள் சிந்தாமணியைக் கூர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வையானது சிந்தாமணியின் மனதிற் பலவிதமான எண்ணங்களை உண்டு பண்ணிற்று. சுலக்ஷணாவின் முகம் சிவந்திருப்பதாயும், அவளுடைய உதடுகள் துடிப்பதாயும் அவனுக்குத் தோன்றிற்று. அவளை விட்டுப் போய்விட்டால் நலமாயிருக்கும் என்ற எண்ணம் அவனுக்குண்டாயிற்று. ஆனால் திடீரென்று அப்படிச்செய்ய அவன் மனம் துணியவில்லை.

[இன்னும்வரும்.]

வ. வி. நடேசன்செட்டி.

ஆத்தங்குடி.

சில குறிப்புகள்.

ஆர். எஸ். நாராயணஸாமி ஐயர் பி. எ. பி. எல்.

சுதேசமித்திரனில் எழுதுகிறார்.

———:(o)‡(o):———

(1) ப்ரிட்டிஷ்ஸாம்ராஜ்யத்துக்குட்பட்ட ஸ்வாதீன அரசுரிமையை இந்தியரும் அடையவேண்டும்.

(2) ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்துக் குட்பட்ட மற்றத் தேசங்களுடன் இந்தியாவும் சமபதவியடைய வேண்டும்.

(3) ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்ய நாடுகளும் இந்தியாவும் சகோதரர் போல் அன்யோன்ய அன்பு ஆதரவுடன் ஒத்து வாழவேண்டும்.

(4) இந்தியாவின் ராஜாங்க விஷயங்களை இந்தியரே வகிக்கும் உரிமை பெறவேண்டும்.

இப்பொழுது என்ன குறை?

அடியிற்கண்ட குறிப்புகளால் உலகத்திலுள்ள தேசங்களிலெல்லாம் நமது தேசந்தான் பரமதரித்திர தேசம் என்றும், அபரிமிதமான ராஜாங்கச் செலவுள்ளதென்றும், கல்வி கலை தொழில் முதலானவைகள் க்ஷீணதசையி லிருக்கின்றன வென்றும் அறிவோம்.

ஸ்வராஜ்யத்தால் எப்படி இக்குறைகள் நீங்கும்.

அபரிமிதமான ராஜாங்கச் செலவைச் சுருக்கலாம். நமது தேசச் செல்வம் வெளியேபோகாது காக்கலாம். கல்வி கலைகள் தொழில்களை விருத்திசெய்து நமது தேசச் செல்வத்தையும் விருத்தி செய்யலாம். கல்வி, சுகாதாரம் தேசவசதி முதலான தேச க்ஷேமங்களுக்கு அவசியமானவைகளுக்கு இந்நிலைமையிற் பணம் போதாக் குறையை நீக்கி ஏராளமாய்ப் பொருள் உதவிசெய்யலாம். நமது தேசத்தாரும் மற்றத் தேசத்தாரைப்போலக் கல்வியும் செல்வமும் சிறந்து ஸ்வாதீனம் சமத்வம் என்னும் உடன்பிறந்த உரிமைகளையும் மதிப்பையும் அடையலாம்.

ஜனத்தொகை.

இந்தியாவில் இந்தியர் 32 கோடி, ஐரோப்பியர் 2லட்சம்.

இந்தியன் ஸிவில் ஸெர்விஸ் உத்யோகஸ்தர்	சீமையில் நியமனமானவர் 1350 இந்தியாவில் 61
500 ரூபாய்க்கு மேற்பட்ட உத்யோகஸ்தர்.	ஐரோப்பியர் 4,042. இந்தியர் 942.
800 ரூபாய்க்கு மேற்பட்ட உத்தியோகஸ்தர்.	ஐரோப்பியர் 2,259. இந்தியர் 242.

சம்பள விகிதம்.

1 டாலர் ரூபா 3 2 0 (அமெரிக்கா)

1 என் ரூபா 1 9 0 (ஜப்பான்)

ராஜாங்கத்தலைவர்கள் வருஷச்சம்பளம்.

ஜப்பான்முதல்மந்திரி 12000 என்
ஷை கவர்னர் 4500 என்
அமெரிக்கா ப்ரஸிடெண்ட் 75,000 டாலர்.
ஷை கவர்னர்கள் 12,000 டாலர்
இந்தியாவைஸிராய் செலவுதவிர 2,50,800 ரூபா

கவர்னர்செலவுதவிர ரூ1,20,000
மந்திரிகள் (வருஷச்சம்பளம்)
ஜப்பான் 8,000 என்
அமெரிக்கா 12,000 டாலர்
இந்தியா, கௌன்ஸில் மெம்பர் 80,000 ரூபா

மற்ற உத்தியோகங்கள்.

செல்வம் செழிக்கும் அமெரிக்காவில் வருஷச்சம்பளம் 25,000 ரூபாய் (8000 டாலரு) க்கு மேற்பட்ட உத்தியோகங்கள் 3 தான். பரம, தாரித்திரிய தேசமான இந்தியாவிலோ வருஷச்சம்பளம் ரூபாய்

	ஐரோப்பியர்	இந்தியர்
24,000-க்கு மேற்பட்டவர்	223	7
30,000 ,, ,,	131	6
1436,000 ,, ,,	33	—
32,000 ,, ,,	25	—
48,000 ,, ,,	39	—

இவர்களைத் தவிர ஹைக்கோர்ட் ஜட்ஜிகளில் அநேகர் இருக்கின்றார்கள்; அவர்களில் சீப் ஜட்ஜுக்கு வருஷச் சம்பளம் 60,000 ரூ. மற்ற ஜட்ஜுக்கு 48,000 ரூ. இவர்களில் 3-ல் 2 வாசிப் பேருக்கு மேல் ஐரோப்பியர்.

இந்தியா பரம ஏழையான தேசம்

இதை நிரூபிப்பதற்காக, உலகிற் சிலதேசத்தார் சாரசரிச் சொத்தையும், இந்தியரின் சொத்து, வரும்படியுடன் ஒப்பிட்டு அடியில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

ஜனத்தொகை.	ஆள் ஒன்றுக்குச் சாராசரிச் சொத்து.	ஆள் ஒன்றுக்குச் சாரசரி வருஷ வருமானம்
இங்கிலாந்து 4½ கோடி.	5000 ரூ.	600 ரூ.
கன்னடா 7 ”	3000 ரூ.	580 ரூ.
தென் ஆப்ரிகா 6 ”	1500 ரூ.	250 ரூ.
இந்தியா 32 ”	150 ரூ.	30 ரூ.

கல்வி நிலைமை.

நமது தேசத்திற் கல்வி மிகக் கேவலமான நிலைமையிலிருக்கிறது. மற்றத்தேசங்களிலெல்லாம் படித்தவர் 100-க்கு 90பேருக்கு மேலிருக்கிறார்கள். இந்தியாவிலோ எழுதப்படிக்கக்கூடத் தெரியாதவர் 100-க்கு 90 பேருக்குமே லிருக்கிறார்கள். கல்வி யபிவிருத்தி விஷயமாய் இதர தேசங்களில் ராஜாங்கத்தார் எடுத்துக் கொண்டிருக்கும் சிரத்தை இந்தியாவில் இல்லை. இதன் விவரம் அடியிற் கண்ட அட்டவணையால் தெரியும்.

	படிக்கும் பிள்ளைகள் (100 ஜனத்துக்கு)	கல்விக்காக நபர் ஒன்றுக்கு ஸர்க்கார் வருஷச்செலவு.
அமெரிக்கா யு. எஸ்.	21	192 அணா.
ஸ்விட்ஸர்லாந்து	20	164 ...
இங்கிலாந்து	20	120 ...
கன்னடா	20	117 ...
ஜெர்மனி	17	82 ”
ஜப்பான்	11	14 ”
மைசூர்		12 ”
இந்தியா	8	1 ”

குறிப்பு:—ஒவ்வொரு தேசத்திலும்; 100 ஜனத்திற் படிக்கக் கூடிய வயதுள்ளவர் சுமார் 20பேர் என்று மதிக்கப்படுகிறது. மேற் கண்ட அட்டவணையால், மற்றத் தேசங்களிற் பிள்ளைகள் யாவரும் படிக்கின்றார்கள் என்றும், இந்தியாவில், 20 பிள்ளைகளுக்கு 2 பிள்ளைகளே படிக்கின்றார்கள் என்றும், பாக்கி 18 பிள்ளைகள் எக்காரணத்தாலோ படிக்கவில்லை யென்றும் தெரியும்.

உ

வைத்தியக் குறிப்புகள்.

கல்லீரல்வீக்கத்தில்தும்மட்டிக்காய்.

தும்மட்டிக்காயைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி வெயிலில் உலர்த்தவும். அவ்வற்றல்களைக் காற்றுப்புகாத ஒரு குப்பியில் எடுத்து வைத்துக்கொண்டு, குழந்தையின் வயதுக்குத் தகுந்தாற்போல் ஒருதுண்டு முதல் மூன்று துண்டுகள்வரையில் ஆமணக்கெண்ணெயில் (சுமார் ஒருபாலடையளவு எண்ணெயில்) தேய்த்துக் கலக்கி, வாரத்தில் இரண்டு மூன்று தடவை உட்கொள்ளக் கொடுத்து வருவதால், கல்லீரல் வீக்கம் (Enlargement of the Liver) நிவ்ருத்தியாகும் என்று தெரியவருகிறது.

பேய்ப்பீர்க்கு.

இந்தமூலிகை தென்னிந்தியாவிலும் வங்காளத்திலும் விசேஷமாகப் பயிராகின்றது. இந்தமூலிகையின் எந்தப்பகுதியும் மிகக் கடுமையான கைப்புள்ளது. இதன் கனிக்கு மிகவும் தீவ்ரமான விரேசககுணமும், வாந்தி செய்விக்கும் தன்மையும் உண்டு. இதன் வித்துக்குள்ளிருக்கும் பருப்பு-இபிகாகுஞ என்னும் இங்கிலீஷ் சரக்கைப்போலவே சீதபேதியைக் கண்டிப்பதற்குப் பயமில்லாமல் உபயோகிக்கக்கூடிய சித்தௌஷதம் என்று தெரியவருகிறது. இந்தப்பருப்பை ஜலம்விட்டுக் குழம்புபோற் செய்து உபயோகிக்கலாம்.

உபயோகிக்கும் அளவுகள்:—

வமனம் அல்லது வாந்தியுண்டாக்க 20 முதல் 30 கிரைன்.

வாயில் நீர் ஊறச்செய்ய அல்லது குமட்டலை யுண்டுபண்ண— 10 முதல் 15 கிரைன்.

சமநம் அல்லது அழற்சியையடக்க- 5 முதல் 10 கிரைன்.

லேகநம் அல்லது கபத்தைவெளிப்படுத்த-5 முதல் 10 கிரைன்.

இதில் அல்ப்யூமின் என்னும்கருவும் ஒருவிதத்தைலமும் அடங்கியிருக்கின்றன. இதன்கனியை வதக்கிப் பிழிந்தெடுக்கப்படும் சாறானது தலைவலியைப் போக்கும்பொருட்டு மேலே பூசுவதற்குத் தகுந்தது. இச்சாற்றை அநேகவிதமான கடிகட்கும் உபயோகிக்கலாம். கனியையுலர்த்தி நன்றாகப் பொடிசெய்து காமாலையில் நஸ்யமிடுவதால் நல்லபலன் உண்டாவதாகவும் கூறப்படுகிறது. இதன் வேரை உலர்த்தித் தூள்செய்து அதற்கு ஸமனெடையான செம்பருத்திப் பூவின் தூளோடும், அமுக்கிராக்கிழங்குத் தூளோடும் கலந்து பாலிலாவது வெண்ணெயிலாவது குழைத்து உட்கொண்டுவந்தால் மேஹரோகங்கள் தீரும்.

சாரிடாதிகல்ககம்.

நன்னாரிவேர், சிற்றுமுட்டிவேர், கோரைக்கிழங்கு, இஞ்சி, கடுகரோஹிணீ இவற்றை ஸமபாகமாகவெடுத்து(இரண்டிரண்டு தோலா அளவு) இடித்துச் சிறிதளவு ஜலம்விட்டுக் கல்வத்தில் ஆட்டவும்; துவையலைப்போல் ஆனதும் எடுத்துக்கொண்டு காலையிலும் மாலையிலும் ஜலத்துடன் உட்கொண்டுவந்தால் மலம் தாராளமாகக் கழிவதுடன் ஜ்வரமும் தணிவடையும். வைத்தியகலாநிதி.

பத்திரிகை யாராய்ச்சி.

காசி ஹிந்து யூனிவர்ஸிடி.

கௌன்ஸிலுடன்கூடிய கவர்னர்ஜெனரல் அவர்கள், காசிஸெண்ட்ரல் ஹிந்துகாலேஜானது 1917-வரு அக்டோபர்மீ முதல் தேதிமுதல் காசிஹிந்துயூனிவர்ஸிடியால் ஆதரிக்கப்பெற்ற ஒருகாலேஜாகஇருக்க வேண்டும் என்று ஒரு விளம்பரம் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள்.

ஒரு பெண்ணின் இரைப்பையில் மயிர்ச்சுருள்.

"அகாடமி ஆப் மெடிஸன்" என்னும் வைத்தியஸங்கத்தில் டாக்டர் டேளரியாக் என்பவர் ஒரு அரிய விஷயத்தை வெளியிட்டார்? அது பின்வரும். "சுமார் 13-வயதுள்ள ஒருபெண்ணின் இரைப்பையில் அபரிமிதமான மயிர்ச்சுருள்கள் நிரம்பியிருந்தன. குழந்தைப்பருவத்தில் அச்சிறுமி தன்னுடைய தலைமயிர்களையும் மற்றும் ஆங்காங்குள்ள மயிர்களையும் சுருட்டி விழுங்கிவிடுவது வழக்கம் என்று தெரியவந்தது. இரைப்பைக்குழியையும், கிரஹணி (Deodenum) என்னும் சிறுகுடலின் ஆரம்பப்பாகத்தையும் மயிர்ச்சுருள்கள் அடைத்திருந்தன. அதனால் ஜீர்ணசக்தி மிகவும் இடையூறடைந்திருந்தது. பிணியாளி மிகவும் பலஹீனப்பட்டிருந்தாள். நான் பலவிதப் பரீக்ஷைகள்செய்து பார்த்தும் ஒன்றிலும் உண்மை விளங்காமையினால், உடனே இரைப்பையை ஆயுதசிகித்ஸையினால் திறந்து பார்க்க நேர்ந்தது. அப்போதே இம்மயிர்ச்சுருள்கள் இருக்கக்கண்டு அவற்றை வெளிப்படுத்தியதில் அப்பெண் சுகமடைந்தாள்."

ஒரு பெரும்புலிக்கு ரணசிகித்ஸை.

டெல்லியில் உயிர்ப்பிராணிகளின் காட்சித்தோட்டத்தில் ஒரு பெரிய ஸைபேரியா நாட்டுப்புலி, அதன் கால் நகங்கள் மிகவும் பெரிதாகவும் வளைவாகவும் வளர்ந்து பாதங்களுக்குள் வலியெடுத்து ரணமுமுண்டாகிவிட்டதனால், இப்போது சஸ்திர சிகித்ஸை செய்யப்பட்டது. இருப்புக்கதவுகள் உள்ளதாகக் கெட்டியான ஒரு பெரியபெட்டி அப்புலியிருக்கும் அறையினுள் மெதுவாகச் செலுத்தப்பட்டது. அதனுள் ஒரு இறைச்சித்துண்டைப் போடவே, அப்பெட்டியினுள் அவ்விலங்கு பிரவேசித்துவிட்டது. உடனே இப்பெட்டியின் கீல் கதவு மூடிக்கொண்டது. பெட்டியில் விசேஷமாகக் காற்றுப்புகாதபடிக்குக் கெட்டியாக அமைக்கப்பட்டிருந்தது. க்ளோரபாரம் அப்பெட்டியினுள் பீச்சிடும் குழலாற் செலுத்தப்பட்டது. மிருகவைத்தியம் செய்யும் நிபுணர் பெட்டிக்கு மேற்புறமாயிருந்துகொண்டு அதன்மேல் அமைத்திருந்த கண்ணாடியின்

வழியாக அப்புலி மயக்கம்வந்து விழுந்ததைக் கவனித்துவந்தார். நன்கு மயக்கமுண்டாய் விழுந்ததும், அச்சிகித்ஸைசெய்பவர் மெதுவாகப் பக்கக்க தலைக்கொஞ்சம் மேலே உயர்த்தி, அதன் ரணமுண்டான காலை மெதுவாக இழுத்து, நகங்களையும் சீழ்க்கட்டிகளையும் அறுத்து, அவ்விடங்களைச் சுத்தம்செய்து, மருந்துகளைத்தினித்துக் கட்டுகளையும் கட்டிவிட்டு எளிதிற் சிகித்ஸை செய்துவிட்டார்.

——— Practical medicine.

சபை நிகழ்ச்சிக் குறிப்புகள்.

வித்தியாபரிபாலனசங்கம்,

நாட்டரசன்கோட்டை.

உபந்நியாச நிம்பர் 10.

பிங்கள௵ தைமீ 28 உ (10—2—18) ல் மாதாந்த மீட்டிங் நடந்தது. அதிற் சிவகங்கை ராஜாஸ் ஹைஸ்கூல் ஸைன்ஸ் புரொபெஸர் மகா-ா-ா-ஸ்ரீ M. K. ஸ்ரீநிவாஸையாவர்கள் B. A. L. T. அக்ராசனம் வகித்தார்கள். மாலை 5 மணிக்குச் சபைகூடிற்று. கடவுள் வாழ்த்து, சிவகங்கைச் சிவகுருநாதனென்னும் மாணவனால் நடைபெற்றது. ஷெயூர் உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ A. கோதண்டராமையாவர்கள் B. A. "கல்வியின் பயன்" என்னும் விஷயத்தைப் பற்றிப் பற்பலபாகுபாடுகள் பண்ணிக் கல்வி அவசியமென்றும், அதைக் கற்றவர்கள் தான் மனிதவகுப்பிற் சேர்ந்தவர்களென்றும், உலகநூல்மட்டும் கற்பது கல்வியின் முடிவு அன்று என்றும், "அறம்பொருளின்பமும்வீடும் பயக்கும்" என்னும் செய்யுளாலும் அநேக நுட்பமான அபிப்பிராயங்களடங்கிய உதாரணங்கள் உபகதைகளாலும் நன்குவிளக்கி உபந்யஸித்தார்கள். பின்னர் பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ ப. வைத்தியலிங்கம்பிள்ளை யவர்களும் பண்டிதர் கணபதியாபிள்ளையவர்களும் திரளி ஸ்ரீ உ. வே. இராமையங்காரவர்களும், சுப. வெள்ளைவாரணம்பிள்ளையவர்களும் அவ்விஷயத்தையே நன்கு விரித்து விளக்கினார்கள் முடிவில் அக்ராஸனாதிபதியவர்கள் எழுந்து சபையின் முன் பேசினவர்களின் அபிப்பிராயங்களைத் தழுவி உபந்யாஸ விஷயத்தை விரித்துரைத்ததுடன் பொருட்செல்வம் பொருள் தானத்தைக்காட்டிலும், கல்விச்செல்வம் கல்வித்தானம் மிகச்சிறப்புள்ளது என்றும், ஐரோப்பா தேசத்து ஞானிகள் பலர்களுடைய அறிவின் மகிமையைப்பற்றி உதாரணங்களெடுத்துக் காட்டியும் சபையோர்கள் உளம்களிக்க இனிமையாய்ப் பேசிமுடித்தார்கள். பின்னர்ச் சந்தனபுஷ்பதாம்பூலம் கொடுத்து இரவு 9-மணிக்குச் சபை சிறப்பாய் நிகழ்ந்தது.

நாட்டரசன்கோட்டை. 12—2—18 } K. V. சுப்பிரமணியன்.

கோநகர்

ஞானசம்பந்தநற்சபை.

இதன் மாதாந்தரக்கூட்டம் நிகழும் பிங்கள௵ மாசிமீ ௩-ௗ (14-2-18) வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிமுதல் 8 மணிவரை பலவான்குடி, சித்தி விநாயகவித்தியாசாலைத் தலைமையாசிரியர் வீரமாகேச வீ. குமாரவீரையாவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது.

கடவுள் வாழ்த்தும் முகவுரையுங் கூறியபின்னர் க. வி. கலாசாலை உதவி உபாத்தியாயர் ஸ்ரீ G. ராமசாமி ஐயங்காரவர்கள் 'சூது' என்னும் விஷயத்தையும், ௸ கலாசாலை மாணவன் கோ. சேஷாத்திரி 'கூலவாணிகன் சாத்தனார்' என்னும் விஷயத்தையும், ௸ கலாசாலை மாணவன் வீ. திருஞானசம்பந்தன் "பட்டினத்தார் சரித்திரம் என்னும் விஷயத்தையும் அழகாகவுபந்யசித்தார்கள்.

தலைவரவர்கள் இவ்வுபந்யாஸங்களைப் பாராட்டி அரிய விஷயங்களை எடுத்துரைத்து அழகாக முடிவுரை கூறினார்கள். வழக்கப்படி ஹாரசந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்றன.

சம்பந்தன்.

புதுக்கோட்டை,
சமரசசன்மார்க்கத் தமிழ்ச்சங்கம்.

பரமகருணாநிதியாகிய கடவுளின் திருவருட்பேற்றினால் இச்சங்கத்தின் முதல்வருட பூர்த்திக்கொண்டாட்டம் புதுக்கோட்டை, சீப்கோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான். G. அரங்கசாமிநாயுடு அவர்கள் ஹாலில் நடைபெற்றது. 15-2-18-ந் தேதியில் சீப்கோர்ட்டு வக்கீல் பிரம்மஸ்ரீ G. சர்வேசுவரசாஸ்திரியார் B. A. B. L. அவர்களும், 16-2-18-ந் தேதியில் தஞ்சாவூர், தமிழ்ப்பண்டிதர் மகாமா ஸ்ரீ மு. கோவிந்தசாமிபிள்ளை யவர்களும் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்தார்கள். அவ்வமயம் அறிவிற் சிறந்த பலவித்துவசிரோமணிகளின் அரியபெரிய உபந்யாஸங்கள் நடைபெற்றன. இம்மஹாசபையின்கண் தமிழபிமானிகளாகிய பெரிய உத்தியோகஸ்தர்களும் வக்கீல்களும் பேட்டை வியாபாரிகளும் மற்றுமுள்ள கனவான்களும் இவ்விருதினங்களிலும் வந்து நிறைந்திருந்தார்கள். இச்சங்கம் நீடூழிவாழக் கடவுள்வாழ்த்தும் மகாகனம் பொருந்திய மகாராஜா அவர்கள் பேரில் மங்களவாழ்த்தும் பாடப்பெற்றன. சுபம்!

புதுக்கோட்டை,
சமரசசன்மார்க்கத்தமிழ்ச்சங்கம்.
17—2—18

இங்ஙனம்,
கு. ச. பழ. சங்கிலியாபிள்ளை,
காரியதரிசி.